பிஸ்மில்லாஹிர்ரகுமானிர்றஹீம்.

மெய்ஞ்ஞான மஞ்சரி

இஃது

இளையான்குடி மகா-ள-ள-ஸ்ரீ

பட்டாணி சிக்கந்தர் ராவுத்தரவர்கள்

குமாரரும்

சிக்கந்தர் ஒலியவர்களின் பத்தராகிய ஸ்ரீமத்

முகம்மது மீரான் மஸ்தான் சாகிப்

அவர்களிடம் ஞானோபதேசம் பெற்றவருமாகிய

மகா-ள-ள-ஸ்ரீ

நாகூருக்கனி ராவுத்தரவர்களால்

இயற்றப்பெற்ற

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

அச்சிடப்பெற்றது.

1909.

பிஸ்மில்லாஹிர்ரகுமானிர்ரஹீம்.

மெய்ஞ்ஞான மஞ்சரி.

இஃது

இளையான்குடி மகா-ள-ள-ஸ்ரீ

பட்டாணி சிக்கந்தர் ராவுத்தரவர்கள்

குமாரரும்

சிக்கந்தர் ஒலியவர்களின் பக்தராகிய ஸ்ரீமத்

மூகம்மது மீரான் மஸ்தான் சாஹிப்

அவர்களிடம் ஞானோபதேசம் பெற்றவருமாகிய

மகா-ள-ள-ஸ்ரீ

நாகூருக்கனி ராவுத்தரவர்களால்

இயற்றப்பெற்று

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையிற்

பதிப்பிடப்பெற்றது.

1909.



சாற்றுக்கவிகள்.

நாகூர் தர்ஹா மகாவித்துவானும் மதுரைத்தமிழ்ச்சங்கப்
புலவருமாகிய ஸ்ரீமத்:

வா. குலாம்காதிறு நாவலரவர்களியற்றியது.

அருண்மணக்கு மெய்ஞ்ஞான மஞ்சரியை யெவர்க்கும்விருப்
பமையத தந்தான்
தெருண்மணக்கும் பட்டாணி சிக்கந்தர் ராவுத்தர்
செல்வன் கல்விப்
பொருண்மணக்கும் நாகூருக் கனிராவுத் தப்பெயர்கொள்
புலவர் கோமான்
இருண்மணக்கு மனத்தருக்கோர் பகலவன்போ லிப்புவிக்கண்
ணிலங்க மன்னே.

கீழக்கரையிலிருக்கும் மதுரைத்தமிழ்ச்சங்க வித்துவான் ஸ்ரீமத்:

ஹாபிலு செய்யது முகம்மது ஆலீம் புலவர்
அவர்கள் இயற்றியது.

ஈண்டுவளம் பலசெறியும் பாண்டிவள நாடதனி
லெல்லா மாண்புங்
காண்டகுசீ ருறுமிளையான் குடிநகரி னெடிதுவளர்
கனவா னன
ஆண்டகையாம் பட்டாணி சிக்கந்த ராவுத்த
ரருமைப் பாலன்
வேண்டுபுகழ் நாகூருக் கனிராவுத் தப்புனித
மேன்மை யாளன்.

சிக்கந்தர் மலையில்நிறை சிக்கந்த ரொலியவர்கள்
சீரை யெட்டுத்
திக்கந்தமுறச் சொலடி யாரிளையான் குடிமேன்மை
திகழ வந்தார்
பக்கந்த மனக்கொளுயர் முகம்மதுமீ ருன்மஸ்தான்
சாகிப் பாத
நக்கந்த மலர்பரவி ஞானோப தேசமுற்ற
நன்மை வாய்ந்தோன். (2)

வித்தகப்பன் னூலுணர்ந்து மிகத்தெளிந்து பன்னுளா
விளங்கக் கண்ட
வுத்தமமெய்ஞ் ஞானமெலா முலகினருக் குபகரிக்க
வுள்ளங் கொண்டே
புத்தமுதத் தமிழ்மொழியின் மெய்ஞ்ஞான மஞ்சரிநூல்
புகன்று ளின்னோன்
சித்தமுறு பெருங்கருணைத் திறத்தையிவ ணெடுத்துமுற்றுஞ்
செப்பற் பாற்றோ. (3)

கீழக்கரையிலிருக்கும் மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் ஸ்ரீமத்
பா. பு. ச. சுல்தான் அப்துல்காதிறு புலவர்
அவர்கள் இயற்றியது.

வளையார் குளனும் வயலும் புறஞ்சூழ்
இளையான் குடிநக ரெய்திவாழ் செல்வன்
பட்டாணி சிக்கந்த ராவுத்த ரீன்ற
கட்டாணி முத்தெனுங் கான்முளை யானோன்
திருப்பரங் குன்றெனச் செகமெலாம் போற்றி
விருப்புற மேன்மேல் மிளிர்சிக் கந்தர்
மலையி லடங்கி மருவுசிக் கந்தர்
ஒலியவர் களின்பத முன்னுமெய் யடியராய்

மிகமது மலர்க்கா விரியிளை யான்குடி
முகம்மது மீரான் மஸ்தான் சாகிப்
அவர்களை யடுத்தே யருளுப தேசம்
உவமையி லாவகை யுற்ற பத்திமான்
பாகூ ரும்மொழிப் பாடல் சாற்றும்
நாகூ ருக்கனி ராவுத்த நாவலன்
சுஞ்ஞான நெறிமுறை தோன்றவுள் ளன்பால்
மெய்ஞ்ஞான மஞ்சரி விரித்துரைத் தனனே.

புதூர் அப்துல்லா லெப்பை அவர்கள் குமாரரும், இளையான்குடி
யூனியன் சேர்மென் ஸ்ரீமத்: எம். கே. எம். அப்துல்காதிறு
ராவுத்தரவர்கள் மாணுக்கருமாகிய ஸ்ரீமான்.

ந. அ. இஸ்மாலெப்பை அவர்களியற்றியது.

இளசைவளர் பட்டாணி சிக்கந்த ராவுத்த ரீன்ற மைந்தன்
பளகறு நூல்பலவுணர்ந்தான் பாவலரினடுமணிபோற் பகரத்தக்கான்
குளமனையவின் னுரையான்செல்வமன்புகொடையா திகுறிக்கும்பல்சீர்
வளரவளர் நாகூருக் கனிராவுத் தப்புலவன் மகிழ்ச்சி கூர்ந்தே. (1)

மிக்கபல நூலுமுணர்ந் தவ்வவற்றின் சாரமெலா மேவக் கூட்டி
இக்கனையசுவைத்தமிழில்மெய்ஞ்ஞானமஞ்சரிநூலினிதாச்சொற்றான்
தக்கவரெல்லாருமகிழ்ந் நூலின்பெருமைபெம்மாற்சாற்றற்பாற்றோ
மக்களுமுதற்சிறப்பனைத்துமருவியவன்பல்காலம்வாழி வாழி. (2)





பிஸ்மில்லாஹி

சிறப்புப்பாயிரம்.

இஃது

இளையான்குடி யூனியன்சேர்மேனும் சிவகங்கை தாலுகாபோர்டு
மெம்பரும், மதுரை டிஸ்திரிக்ட் போர்டு மெம்பரும்,
மதுரைத்தமிழ்ச்சங்க வித்துவானுமாகிய

சோதகுடி

ஸ்ரீமாந்:

சாஹிப்பகதூர்

எம். கே. எம். அப்துல்காதிறுராவுத்தரவர்கள்

இயற்றியது.

புயல்நாடு வரையகத்துப் பொருளாலுங் கானகத்துப்
பொருள்களாலும்
கயல்நாடுபணைப்பொருளின்கவினாலுந்திரைப்பொருளின்
கலப்பினாலும்
அயல்நாடு கொளவுதவ லலது கொளாத்திருவுடைய
தாம்நாடென்ன
மயல்நாடா வள்ளுவர்முன் விள்ளுநலங் கொள்ளுமுயர்
வழுதி நாட்டில். (1)

சந்தான மொன்றுரிய கோபதியுண் ணமுறத்
தகவு சான்ற
சந்தானம் பலபடைத்து விருந்தருத்தி நூலறிவு
சால்பு மெய்ந்நே



சந்தான முதற்குணஞ்சேர் தம்பதிகள் தம்பதிபாத்
தழைக்கும் வாழ்க்கைச்
சந்தான பொழில்சுலவ வளரிளையான் குடியென்னும்
தனிமூ தூரில். (2)

மட்டாரு மலர்க்குழலார் மடலெழுதும் வடிவழகு
மதனே யென்னும்
பட்டாணி சிக்கந்த ராவுத்தர் நாமமுளோன்
பாரிற் பன்னாள்
முட்டாது செயுந்தவத்தா லுயர்பாஞ்ச சன்னியந்தான்
முன்ன மீன்ற
கட்டாணி முத்தமென வந்துதித்த நற்புதல்வன்
கல்வி வல்லான். (3)

அலகில்வளப் பரங்கிரியாஞ் சிக்கந்தர் மலையகத்தி
லடங்கி யெங்கும்
குலவியசிக் கந்தரொலி யவர்களடி யாரிளையான்
குடியில் வந்தார்
நலமருவு முகம்மதுமீ ருன்மஸ்தான் சாஹிபெனும்
நல்லோர் தம்பால்
இலகியமெய்ஞ் ஞானோப தேசமுற்றுத் தேசமுற்றும்
இலங்குஞ் சீரோன். (4)

கற்றவர்தங் கண்ணனையான் மனங்கலந்து நட்டவர்க்குக்
காலந் தோறும்
உற்றவிடத் துடுக்கையிழந் தவன்கரம்போ லுதவுகுணம்
உடையான் இங்ஙன்
மற்றவர்க்குக் கிடைப்பரிதாம் பெரும்புகழே யொருங்குகொ
மர்சில் லாத [ண்டான்
நற்றவஞ்சேர் நாகூருக் கனிராவுத் தப்பெயர்கொள்
நன்னு வல்லோன். (5)

தாமுறுமின் புலதுறக்கண் டகமகிழ்வர் பெரியரெனுங்
தகவுக் கேற்பத்
தோமில்ருட் குருவருளாற் றானுணர்ந்த ஞானநெறித்
தொன்மை யெல்லாம்
பூமிமுழு வதும்பரவ மனங்கருதி யெவருமன்பு
பொருந்து மாறு
வாமமிகு மெய்ஞ்ஞான மஞ்சரியென் றொருபெருநூல்
வழுத்தி னானல். (6)

பாகூரு மொழிச்சுவையும் பொருட்சுவையும் நுனித்தறிந்து
படிக்குந் தோறும்
நாகூருக் கனிதரலாற் கனியிரதச் செழுந்தேனே
நாவல் லோர்க்கு
வாகூரு மெய்ஞ்ஞான மஞ்சரியென் றுரைபெயரால்
மலர்ச்செந் தேனே
ஆகூறு மிணையறியேன் அறிஞருக்குத் தெள்ளமுதே
யாகு மன்னே. (7)

சிறப்புப்பாயிரம்

முற்றிற்று.







பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்.

மெய்ஞ்ஞான மஞ்சரி.

காப்பு

பாசமிகுழும்மலத்தைப்பாற்றியொருபரம்பொருளைப்பற்றநாடி
நேசமுறுமுக்குணமொன்றோரிவாலுறுமுத்திநெறியிற்சார
வாசமுறுமருமறைதேர்வரியபரவஸ்துநிலைமனத்துளோங்கத்
தேசுயரவிருவினையற்றொருபொருளையநுதினமுஞ்சிந்தைசெய்வாம்.

வெண்பா.

எப்பொருட்குமேலாயிலங்குமறைமுடிவே
யொப்புவமையில்லாவொருமுதலே—மெய்ப்பேர்த்
திருவேகன்மோனத்தெளிவேசுடரே
கருவேநின்றாளேகதி.

கடவுள் வாழ்த்து.

அகவற்பா.

எவற்றினுமேலாயிலங்கிடுமணியா
யகத்தினுமடங்காதருவாயுருவாய்த்
தோற்றிடாததுவாய்த்தூயதாய்நின்ற
வேற்றுமையில்லாமெல்லியபொருளாய்ப்
பல்லுயிரனைத்தும்பாங்குடன்புரந்து
வில்லபயாவும்வளப்பெறமுடித்ததாய்த்
துறந்தவர்மனத்திற்றூய்மையதாகச்

சிறந்திடநின் றசின்மயவடிவாம்
பகரொணுவிறைவன்பதங்கடைப்பிடியா
யகமுறப்பொருத்தியன்புறுநற்றவம்
படைப்பவர்தமக்குப்பந்தமற்றின்பங்
கிடைக்குமென் றருமறைகிளத்தியவண்ணம்
மெய்யெனக்கருதிமெய்ப்பதமுறயா
னுய்யும்பொருட்டாவுரைக்கேனிதுவே.

வேறு

தூண்டாவிளக்கேசுடரொளியேதுரியாதீதமேயன்பு
பூண்டார்பதியேபுகலிடமேபுறமுமகமுந்நிறைவாகி
யாண்டாளிறையேயருள்வடிவேயருவேதிருவேயயராது
நீண்டவுலகிற்பாவிதுயர்நீக்கியாள்வாய்றகுமானே. (க)

காயங்கடத்திப்பதியடையக்கருத்தொன்றருள்வாய்கருணைமிகு
நேயமறிந்துநிலைபெறவேநீயேபுரிவாய்புனிதவிருள்
மாயமயக்கமகற்றியெற்குமாறாதன்னற்பதமருள்க
தூயவெளியேசுகநிலையேதுணையேயெனையாள்றகுமானே. (உ)

வஞ்சனிபுலீசெனுமயக்கேமனத்திற்பெரிதாயுறவாடி
மிஞ்சிப்பாசவலைவீசுமின்னார்மயலில்வீழ்ந்துதுய
ரஞ்சிப்படும்பாடதுபோக்கியருளானந்தமாடிடவே
கெஞ்சியழுதேன்றுறைதெரியக்கிருபைசெய்வாய்றகுமானே. (ங)

முன்னின்றெனைக்குமுதற்பொருளேமூடுகிறதியாதிருந்தென்மனம்
தன்னால்வருந்தியலைந்ததுயர்தன்னைநீத்துன்பொன்னடிக்கீழ்
நின்னுதரவென்றேதுதித்துநின்றேனுலகிலெவ்வுயிர்க்கும்
மன்னுநிகரில்வளங்குதிருமறையின்முடிவேறகுமானே. (ச)

வேறு

ஆதியானவரும்பொருளேபுகழ்
நீதியாகநிறைந்தநிராமய
வோதியான்றொழுதோர்ந்துபணிந்திடக்
கோதெலாமறுத்தாட்கொளவேண்டுமே. (ரு)

திக்கினெங்கணுந்தேடற்கரியவோர்
* சொக்கனேமனந்தூயவனேகருப்
புக்கபின்புணைப்போற்றிநின்றேன்மனத்
துக்கம்போக்கிச்சுகமருளாதியே. (௬)

வல்லனேயுயர்வானவகோசரா
வெல்லையற்றுவிளங்கிடுமெய்யனே
யல்லிராப்பகலற்றபெரும்பதி
யெல்லைமேவவெனக்கருளாதியே. (௭)

அண்டரண்டபகிரண்டமெங்கணுங்
கண்டகோலங்கணக்கிடலாவுனை
விண்டுநல்லருள்வேண்டித்துதித்திடுந்
தொண்டனுக்கருளேசெயுஞ்சோதியே. (௮)

மெய்யினுள்ளும்புறமும்விளங்கிடு
மையனேயுனையன்றிமற்றொன்றிலை
துய்யனேதிருச்சோதிப்ரகாசமே
யுய்யுமார்க்கமெனக்கருளாதியே. (௯)

வாமமேமணியானவிளக்கொளி
யோமமேநிலையோருருவற்றவுஞ்
ஞமமோதிநலம்பெறவேகதி
தாமதஞ்† செயல்தந்தருளாதியே. (௧௰)

அந்தமற்றவருஞ்சுடரேதிரு
விந்தைமேவிவிளங்கிடவுந்தியிற்
பந்தமற்றுப்பரவெளியேகவுன்
சொந்தமானசுயவருளீதியே. (௧௧)

---

* சொக்கன் - அழகன், சொர்க்காதிபதி.

† செயல் - செய்யற்க.

நின்றநீர்மைநிகழ்த்தவொணாதிரு
குன்றமானவகோசரகோமனே
யன்றியுன்னருளுய்யும்படியென
நின்றபாவியானின்னடிதஞ்சமே. (கஉ)

வேறு

ஒன்றாகியிரண்டாகியொன்றிரண்டுபொருளாகி
யுணர்வாயாவு
நின்றாடுமணியாகியம்மணிக்குணிறைந்திடுநின்
மலம்தாகி
யென்றாகியினிதாகியிசைந்துமிசையாயொளிரு
மெல்லாமாகிக்
குன்றாதவாய்மையெனுமரியபரஞ்சோதிநலங்
கொடுத்தாள்கோவே. (கங)

சொன்னயமும்பொருணயமுந்தோற்றுவிக்குமருங்கிளையுந்
தொகுக்கவல்ல
தன்னயமுந்தகுதிபெறுமுருஷெல்கபிமார்களுக்குஞ்
சதுர்வேதத்தாற்
பன்னயமுங்காட்டுவித்துப்பலன்கொடுக்கும்பரம்பொருளே
பார்க்குஞான
நின்னயமுநிலையனைத்துங்கடந்தொளிரும்நின்மகிமை
நிறுத்தாள்கோவே. (கச)

வானுலகும்பூவுலகுமற்றுலகுமெண்ணரிய
வகுப்பனந்தம்
தானுலவுமெழுவகையின்குலமனைத்துஞ்சார்ந்தொளிரு
தனியேயாதி
யானுலகிற்பிறந்துபடுதுயரனைத்துமகற்றுவிந்தா
னந்தசித்தி
கானுலவவகத்தினிடையகலாதழுத்திநிலை
காட்டுங்கோவே. (கரு)

ஏகவலா னொருவநீயெவ்வுயிர்க்குமுன் னுணர்வா
யியற்றும்வாய்மை
யாகமெலாங்கடந்ததிருவற்புதனேயருள்வடிவே
யறிதற்கொண்ணு
வூகமெலாம்புகட்டுவிக்குமுற்பவத்தையுட்டுணையா
யுகந்தார்சிந்தை
மோகமெலாந்தவிர்த்தெறியுமுதலவனேமுத்திநெறி
மூட்டாய்கோவே. (கசு)

ஐயனேநின்பெருமையறிந்துரைக்கவெவரானு
மடங்காதோங்குந்
துய்யனேநின்னையன்றியெத்துணையுமில்லையினித்
துணைக்கண்ணுக
வுய்யெனநின்வழியருள்கவுன்னருளிலெந்நாளு
முகந்துவாழ்கச்
செய்யெனநின்சிற்றடிமைபவவினைகளாற்றிநின்பாற்
சேர்த்தாள்கோவே. (கஎ)

நபிநாயகமவர்களின் றுதி.

வெண்பா.

இருபதிக்குநாயகமாயெவ்வுயிர்க்குத்தாயாய்த்
தெருள்பெருக்குமெய்ஞ்ஞானத்தேவாந்—திருவுருக்கொண்
டெம்புவிவிளங்குமகுமதிறசூலிருதா
வின்பமுடனேபுகழ்ந்தேனிங்கு. (க)

வேறு.

வான்முகட்டுலவுமதியழைத்தமாவாசையிற்புதுமைகாட்டிநேர்
தீனவழிகருரியபேர்களும்புகழ்செய்திக்கினும்மதிகமக்கம்வாழ்
ஞேநனுரைக்குமறையிற்குரியமகுமூதரென்குறையகற்றிநல்
மோனமுத்திதரவேணுமிச்சமயமுடுகிவந்தருள்செய்நாதரே. (உ)

வேறு

எக்கருமங்களுங்கக்சனுரைப்படியேவல்நடத்தியவா
திக்கொடுகோலமறிந்துரைபேசியசின்மயமானதவா
* கக்கன்சமீபமிகக்கருணைக்கடல்கற்பகபத்மபதா
துக்கருமங்களகற்றியுநற்கதிசூட்டுமுகம்மதுவே (௩)

சொச்சமதானசுயப்பொருளாகியசுந்தரவானந்தா
கச்சணிமாதர்வலைக்குளகப்படுகற்பனைவந்திடினு
மிச்சமயந்தனிலின்புறுதற்கொருவஏழைதனக்குப்பயப்
பச்சமலர்ப்பதமுத்திகொடுத்திடுபாக்யமுகம்மதுவே. (௪)

சுத்தநிராமயபக்கமீதாடியசூக்மமயில்வடிவே
வித்தினில்வித்தாயெங்கும்விளங்கியவேதவிநோதாவே
மத்தியமானவழிக்கடைபுக்கமகத்துவகர்த்தாவே
நித்தியமாகவெனக்கருள்தந்திடுநீதமுகம்மதுவே. (௫)

விண்ணவர்வந்துவணங்கியமெய்ப்பொருள்வேதவருட்கடலே
பண்ணவர்போற்றிடுமன்னவர்வாழ்த்திடுபத்தியெனக்கருளே
† பிண்ணமதாகிடுபேதப்புலன்வழிபின்செலாதஞ்சிடநல்
லெண்ணம்நிறைந்திடவெங்கள்முகம்மதேயேகவரந்தருவீர். (௬)

வேறு.

பாதாரவிந்தமேபரலோகமவுனமேபயகாம்பராலநபியே
யாதாரமானதலமாறுங்கடந்துமெய்யாந்தவக்கனலைமூட்டி
மீதாகிமுச்சுடருமொன்றாகிநின்றபெருமேன்மையதுவாகிநிற்க
சூதானவைம்பொறியெலாந்தொலைந்தோடநற்றுரியமதெமக்கருளுவீர்.

சோதியருள்தூதரேசோமணையழைத்திடுஞ்சுந்தரானந்தசுயமே
[illegible]கநின்மலசொரூபமாய்நிகழாதவொளிவானபின்
ஆதியிலமைந்தமாவாசியாமறியமூடனுகிறப்பதவியதனில்
ஓதியேமணஞ்செய்யுமுண்மையிறைதூதரேவேரெழுத்துறவருளுவீர்.

---

* கக்கன் - அறிவையுடையவன்.
† பிண்ணம்-பிணம்.

வானாதிபூதலமுமற்றுமுயிரானபலவகையானதோற்றமதுவி [ளை
ஊனாகவுணர்வாகவுட்புறமதாகவெங்குறைந்துநிறைகின்றபொரு
ளானாகநின்றமேதஜோமயச்சுடரினெந்நாளுமறவாதிருக்கத்
தீனானநேர்வழியிலாகிடச்செய்குவீர்செய்யிதிறசூலகுமதே. (௯)

கட்டாதகாளையதுகட்டிடக்குகையினிற்கம்பமூணேமீதாகவும்
எட்டிமேலேற்றவும்பிறையருள்தோற்றவுமிலங்குமணியூசலுக்குள்
மட்டிலாத்தீபமாயெங்குமொளிவானதில்மருவிலாச்சோதியான
அட்டதிக்காண்டிடுமரூபியாவந்தாளுமருமைமகுமூதருள்குவீர். (௰)

வேறு

அந்தமில்லின்பத்தருப்பொருணிலைபிணைச்சேரல்
எந்தநாளெனத்தயங்கிடும்பாவியுன்னருளைச்
சிந்தைவைத்தெனைக்களிப்பநின்றிருவடித்துணையை
யிந்தநேரம்வந்தருள்புரிந்திடுமகுமூதே. (௰௧)

ஏட்டினிலெழுதவிணங்கிடாதிறையருட்பொருளைக்
காட்டிடுமவுனகண்மணித்தாயெனக்கமுத
மூட்டிடுமரசேமுடிவிலாப்பொருளதையுணரப்
பூட்டிடுமருளிற்புகழுறச்செய்மகுமூதே. (௰௨)

உதயநற்கிரியுகந்தருள்துலங்கிடமவுனப்
பதியெனுங்கருப்பண்புறப்பரத்திடைவெளியிற்
கதிதருங்குருகழலடிசிரமிசைக்கவின
* வதிதமாயகத்தன்புறச்செய்மகுமூதே. (௰௩)

முகியிதீனாண்டவர்களின்றுதி.

நல்வரமளிக்கநன்கதுவிளங்கச்
சொல்லதுதுலங்கத்துரியமதாக
வல்லும்பகலுமன்பரேகுருவே
விள்ளுமெய்ஞ்ஞானம்விளங்கிடவருள்வீர். (௧)

* அதிதம்- அதீதம்

வேறு.

குறைசியங்குலத்தில்வந்திக்குவலயம்புரக்கும்வேந்தே
மறைகளைத்தேர்ந்தபூபேமுகம்மதுநபியின்பேறே
முறைமுறையாகவந்தமுகியிதீனாண்டகையே
புறையறநீக்கிஞானம்புந்தியிலுறையச்செய்வீர். (௨)

வேறு.

நாதமுதலானபூவாசமலராகியேநல்லமுதமானகனியே
தீதுமுதலானதொருபாவமணுகாதவாதிவ்யசுயமானபொருளே
நீமதுவானநல்யோகவருளேசெயும்நேர்வழியிலாயிருக்கச்
சாதனமதானதிற்சார்ந்திடச்செய்குவீர்சற்குருமுகியிதீனே (௩)

வேறு.

மருக்கமழும்வாவிபலசூழுபகுதாதினி
லிருக்குமொலிநாதர்தம்மிருபதம்பணிந்தெனக்
கருக்குழிதெரிந்துநற்கமலவன்னிவாயுவை
திருக்கறுத்துநான்றினந்தியானமாகவேண்டுமே. (௪)

உதித்தெழுந்தவாசிபுமுணுவுமேனின்றுடிடக்
கதித்தெழுந்தபேரினங்கள்கண்டுமையல்கொண்டிடத்
துதித்தெழுந்தஞானமுந்துரிதமாய்த்தெரிந்திடப்
பதித்தெழுந்துவாழநற்பாதமதீதல்வேண்டுமே. (௫)

காலினிற்சதங்கைகட்டிக்கன்னியாண்மாதவள்
சோலையிற்குயிற்கள்போற்றொனிக்குமிந்தமா[illegible]ரங்
கோலிநின்முனையதாய்க்குறித்துளின்பங்கொண்[illegible]டப்
பாலினுண்ணெய்போற்கலந்தபான்மையைப்பகருமே. (௬)

பாலபாலமீதிலேறிப்பழகியாடிநின்றிட
மேலதானமீமிலேமிகுபுகழ்தன்றானிலே
காலகாலம்வாழ்கவுங்ககனமாகநின்றவென்
கோலமாமுகியிதீன்குருநாவருள்புரிகவே. (௭)

உயர்ந்தசிரசானதிலுருகிநெருப்பாயிறை
லயர்ந்தமர்ந்துநின்றிடவன்னேரமாசையானதை
வியந்துசொல்லலாகுமோவெதும்புமெய்விலக்கநீர்
நயந்துகேட்கவெண்ணினேனலந்தருகவேண்டுமே. (௮)

வேறு.

பார்த்துப்பார்த்துப்பரவெளியானதிற்
கோத்துக்கோத்துக்கொளுகிடப்பாதைபிற்
போற்றிப்போற்றிப்புராதனமானதைக்
காத்துநிற்கக்கருணைபுரிகுவீர். (௯)

ஆனந்தானந்தஞானந்தெரிந்தவா
வானந்தானந்தமக்கடைசென்றவா
மோனந்தானென்றமுத்திதருஞ்சுகத்
தானந்தந்துதழுவிடச்செய்குவீர். (௧௰)

பொருளறிந்திடப்பொற்குருநாதரே
யருளறிந்துவகாரவுகாரமா
யுருவறிந்துவுணுவினின்றுடிடக்
கருவறியக்கருத்துளிருத்துமே. (௧௧)

மச்சமைவிழிமாதுசிரோமணி
கொச்சங்கட்டிக்குலுக்கிநடிப்பவள்
மிச்சபாசமிடியதைத்தீர்த்திட
விச்சமயமிரங்கிடல்வேண்டுமே. (௧௨)

மட்டிலாததோர்மாணிக்கப்பொற்கிரி
யெட்டியானதைத்தொட்டுத்தொழுதிடச்
சுட்டியானோர்சுழன்றுமயங்கிடக்
கட்டியானதைக்கண்டுமகிழுமே. (௧௩)

கண்டுநில்லருளேகருத்தொன்றிட
விண்டுபாறைதவிளம்பியறிந்திடப்
பண்டுபோலபபரகதியாகவுந்
தொண்டர்போலத்துறவறமாகவே. (௧௪)

மச்சுமாளிகைமாதனமானதை
நிச்சயித்துயிர்நீடுழிகாமோப்

பச்சமானபதந்தெரியாமலே
யெச்சுநின்றுவிழைத்திடலாகினேன். (கரு)

காலங்காலங்கலையுணராமலே
ஞாலமீதினில்நற்கருமஞ்செயாக்
கோலமானகுறிதெரியாப்பெரும்
போலியானெனையாள்வதும்புண்ணியம். (கசா)

பண்பறிந்துநற்பாலமீதேகிடத்
தென்பறிந்துந்தியானித்திருக்கவோர்
மின்பராமதைமேவித்தொழுதிட
அன்பர்வந்துவரனருள்சாற்றுவீர். (கஎ)

காத்துநின்றிருக்கண்ணொளிவாந்திருப்
பார்த்துவுள்ளப்பதியிற்பொருந்துகச்
சேர்த்துமெய்யிறையோன்றிருப்பூரண
தீர்த்தமாடித்தெளிவுறச்செய்குவீர். (கஅ)

தோழியாகியதோகைமயிலெலாம்
வாழிகூறிமணவறையிற்குருத்
தாழில்வீழ்ந்துதலைவனைச்சேர்ந்துற
வூழிகாலமுணர்ந்துறவாகவே. (கசு)

கண்ணதாகக்கருத்தொன்றிநின்றிட
விண்ணதானவொளிவெளியானதிற்
றிண்ணமாகத்திடப்படநின்றயா
ளெண்ணதாகவொடுங்கிடல்வேண்டுமோ. (உ0)

மனதின்மாய்கைமயக்கமில்லாமலே
யெனதிடத்தில்நின்றூடித்துதித்திடக்
கனமதானகரும்பொருட்சோதியை
வினவிநின்னருள்வேண்டிடச்செய்குவீர். (உக)

நீதஞானந்தெரிக்குசுயம்பிரான்
நாதநாதர்மகுபூபுநாயகா
வாதமாகியவைம்புலக்கூத்தினைத்
தோதுசொல்லித்துரத்திடச்செய்குவீர். (உஉ)

முகியித்தீன் ஆண்டவர்கள் பதிகம்.

சுத்தகல்லதத்விதசுகாரம்பவருவுருவ
சூட்சாதிசூட்சமாகிச்
சுகமொளிர்சதானந்தபதிமோனநிலையான
சொல்லற்றுநின்றபரமே
எத்திசையினும்புகழ்பெற்றபகுதாதுநக
ரேகிவளரின்பமணியே
பிதாகாசமாகியுலகெல்லாந்துதிக்கவள
ரெந்தையேயெம்பிரானே
பத்தியருள்சித்திபுமுற்றபரவித்துவிற்
பண்புறவுமின்பமோனப்
பாதமடிசேரவும்பதிகண்டுதேர்ந்திடப்
பண்பின்வழிநேர்புக்குக
கத்தனருள்தந்திடப்பெற்றுறவுமாகிடக்
காரணமீதானதெளிவே
கருணைபுரிநாதரேகதியுதவுநீதரே
ஹவுதேயெம்முகியித்தீனே. (க)

அஞ்சனமணிந்துபலவாடைகள்மினுக்குமிள
வன்னநடைமின்னார்களி
னுசைபெரிதாகியேமோசவழிசென்றுயா
னறிவிலாப்பேயனாகிப்
பஞ்சபெருபா[illegible]திற்சஞ்சலந்துற்றுடல்
பதைபதைத்தலறிவாடிப்
பாசுபதமறியா[illegible]தமாவியாய்த்தோசியாய்ப்
பாசவழியுள்ளாகினேன்
வஞ்சமகிலாமலேமவுனமதுதோன்றிட
மாதவமெனக்கருளுவீர்

மாகோடிபாதகஞ்செய்தவினைநீக்கியென்
மனமீதிருந்தருளவே
கஞ்சமலரடியையான் கெஞ்சியேயஞ்சினேன்
காப்பீரகற்பகாவே
கருணைபுரிநாதரேகதியுதவுநீதரே
ஹறவுதேயெம்முகியிதீனே. (௨)

அல்லுபகலாகவொருவனுநேரமயராம
லலையுமென்னாவியெல்லாம்
அதிகதவமுதியமறையுணராதபாவியா
னனியாயமாய்த்திரிந்து
நில்லாதசொல்லுமாய்நிலையாதகாயமாய்
நிஷ்டூரமாயலைந்து
நெற்றிக்குநேர்நின்றநின்மலசொரூபமது
நினைவுக்குமெட்டாததாம்
பொல்லாதகாமியாய்ப்போக்கற்றமூடனாய்ப்
புலம்பியேவீழுகினேன்
பொற்கமலமலரிடைப்போகிமணமாகிடப்
போதமயமானகுருவே
கல்லாதாருறவுகளிலாமலேகனவிலும்
ஹக்கனருள்வந்தெய்தவுங்
கருணைபுரிநாதரேகதியுதவுநீதரே
ஹறவுதேயெம்முகியிதீனே. (௩)

மூலமுதலாதாரமுடிவறிவதாகிட
மூணைமேலுபாயமாக
முன்னேறலாகியேமுப்பாழ்கடந்திட
முத்தியருள்சித்தியாகச்
சீலகுணமாத்திருச்செல்வரேமெய்ஞ்ஞான
செங்கரும்பானவமுதே

சிகரமதிலுயர்வானதெள்ளமுதவின்பமற்
சிவன்மயமானகுருவே
வாலசூரியராகிவந்தணுகிநின்றிட
வரம்பெறற்கருள்புரிந்து
வருங்காலவருவினையென்வாக்கிலருளாகவும்
வறுமையதுதீர்த்தோடவுங்
காலானநெறிகண்டுமேலானதுறைசென்று
காட்டிநற்கிருபைகூர்ந்து
கருணைபுரிநாதரேகதியுதவுநீதரே
ஹவுதேயெம்முகியிதீனே. (ச)

கோசரமதாகிநற்கொள்கையதுபூண்டிடக்
குணமதையறிந்துணர்ந்து
கும்மென்றமிதானியையுங்கூவென்றவோசையுங்
குறைவற்றிருந்துயோக
வாசம்பொருந்திமணவாமமதறிந்துமெய்ஞ்
ஞானவாரிதியில்வீழ்ந்து
மாசற்றசோதியொளிவாசற்றிறந்துலவ
வள்ளலேவ்வரமீகுவீர்
தேசாதிதேசமுந்திருவாசநேசமுந்
திவ்யசுயமானகுணமுஞ்
சீர்பெருகுமாதியருளாகவுமேன்மையாய்ச்
சின்மயமதானதுறையில்
ஹாஜமகுபூபுபகமேவுதிருவாசக
காட்சிதந்தன்பாகிடக்
கருணைபுரிநாதரேகதியுதவுநீதரே
ஹவுதேயெம்முகியிதீனே. (ரு)

அம்பரமதன்னிலுமணுதிமயமானது
மகம்புறமதாடிநிற்க
வசுரர்கிளையோடவும்அமரர்பதியாகவும்
மக்கினியிலானபொருளு

மின்பகனியாகவுமேகருசிபோலவும்
மென்றைக்கும்யானருந்த
விகபரமிரண்டினிலுமெழில்சோதியானதும்
மிரவுபகலற்றிடத்தே
துன்பமதிலாமலேசுகதுக்கமற்றிடச்
சுழிமுனையிலாடிநிற்கச்
சொக்கியருள்பெற்றிடச்சுத்தவொளியாகுநற்
சொல்லதிகமானகுருவே
கம்பமுனையானதிற்ககனவெளிதோன்றிடாக்
கற்பூரதீபவொளிபோற்
கருணைபுரிநாதரேகதியுதவுநீதரே
ஹவுதேயெம்முகியிதீனே. (௯)

கோதிலாவித்தையுங்கொண்டிடச்சுயமதுங்
குலவுமணிமண்டபத்துட்
கூடியுறவாகிடக்கோடிப்ரகாசமாய்க்
குறியினிலடக்கமாக
பாதுகாத்திடவும்யான்பரிபாலனஞ்செய்து
பக்தியாய்நேமமாகிப்
பைந்தொடிச்சத்தியைப்பாதம்பணிந்திடப்
பரமனருளுதவியாக
மாதனமதாகியேமணிமந்திரங்களாய்
மாசற்றசோதிவடிவே
மனமறிவதாகியேமாதவமதாகிட
மட்டிடாச்சோதியொளியே
காதுகண்மூக்குமுன்கண்டிடச்செய்கவே
ககனவெளிசென்றகுருவே
கருணைபுரிநாதரேகதியுதவுநீதரே
ஹவுதேயெம்முகியிதீனே. (௰)

அருவிலுருவானநல்லானந்தசோதியே
யற்புதவிநோதமணியே
யகிலமீரேழினுமனைத்துயிரனைத்தினும்
அணுவினுக்கணுவதான
உரிமையுறவாகநின்றற்பனமதானதை
யுள்ளகமறிந்துகொள்க
வுண்மையுறவாகவிவ்வுலகநடைசேர்ந்துமெய்
யுழலாமலெக்காலுமே
யருள்பெறவேயனுதினமுமயராதுகலிமாவை
யனுக்ரகஞ்செய்திருக்க
வாதாரமானதிற்சேதாரமில்லாம
லன்புகூர்ந்தருள்புரிகுவீர்
கருவெளியிலாகிநற்கம்பமதறிந்திடக்
கலைமதியினூடாகிடக்
கருணைபுரிநாதரேகதியுதவுநீதரே
ஹவுதேயெம்முகியிதீனே. (௮)

அலிபுலாம்ஹேமீமுதாலதிற்கூடியே
யாகாசமேலுணர்ந்து
ஐயெனுங்கலிமாவையாதாரநிலையினின்
றனலிலுருவாய்நிறுத்தி
நலியாமல்நெகிழாமல் நற்கயிறுமாட்டியே
நாணத்தைவேரறுத்து
நாற்கோணமீதிலேநற்கருணைதந்திட
நல்லமுதமானகனியே
சலியாமலென்றனக்கருள்புரியவேண்டிநற்
சமயசாதனமதாகச்
சற்குணவுலாசரேசற்புத்ரநேசரே
சம்பன்னரானவொலியே
கலியானதோடவுங்காத்துரக்ஷிக்கவுங்
காக்ஷிதந்தருளாகவுங்
கருணைபுரிநாதரேகதியுதவுநீதரே
ஹவுதேயெம்முகியிதீனே. (௯)

தூண்டாததீபவொளியாய்நின்றதிவ்யமே
துரியமீதானவடிவே
தூகளறவுமெய்ஞ்ஞானதுல்லியமதாகிடத்
துய்யவெளியதனிலேதான்
பூண்டிடப்பொற்கிரியிலநுபோகமாகவும்
புண்யதவமானவொலியே
புகழாகவோங்கவும்புராதனமதறியவும்
பூராயமுடிவாகவும்
ஆண்டிடவுமாதாரமயமாகியானந்த
வற்புதசுயம்ப்ரகாச
அன்புமீக்கூர்ந்திடவுமாதியருள்நாதரே
அசோகநல்வனந்தன்னிலே
காண்டபொருளாகவுங்காரணமதாகவுங்
கதிர்மதியுமொன்றாகவுங்
கருணைபுரிநாதரேகதியுதவுநீதரே
ஹவுதேயெம்முகியிதீனே. (௧௦)

பூரணமதாகிநற்புண்யபூபாலராய்ப்
புகழ்பெரியபூராயராய்ப்
பூலோகமெங்கணும்போற்றுதலுமாந்திருப்
பொற்கமலமானசுயமே
ஆரணமதானபொருளானதையுணர்ந்தெற்
கனுக்ரகஞ்செய்தருளுவீர்
அருவுருவமாய்நின்றகப்பொருளுமானதை
யடியனுக்கருள்கூர்ந்திடத்
தாரணிசிறந்திளசைமேவுசிக்கந்தநற்
றவமதிலுதித்தசெயன்
சந்தானமுஞ்சொல்நாகூர்க்கன்னியிங்கித
சாதனகவிக்கிரங்கிக்
காரணமதானபலகாக்ஷிபெறநம்பினேனை
கக்கனருள்பெற்றகுருவே
காருணைபுரிநாதரேகதியுதவுநீதரே
ஹவுதேயெம்முகியிதீனே. (௧௧)

ஹமீதொலியவர்களின் துதிப்பதிகம்.

காப்பு.

காட்டகத்தி ஞானிலுக்குப் பிணையாகிப் பிணைவிடுத்துக்
கருணை [illegible]ந்தப்
[illegible]ட்டகத்துப் பொருள்விளங்கப் புதுமையினும் புதுமையெனப்
போற்றும் வள்ளல்
[illegible]ட்டகத்தி னடுமணியாய் நல்லருமைப் பேரருமாய்
நாகை வாழும்
வீட்டகத்துக் கோர்ம[illegible]ணியாய் விளங்குகமி தொலியிருதாள்
மே[illegible]வி வாழ்வாம்.

அரும[illegible]முடிவாகியருவாகியெங்குநிறை
யற்புதானந்தமயமா
யாதிமுக்குணபூகபிறிவாகியற்புதத்
ததிலமைந்தெழுவகைக்குங்
கருணைபொழி மூகிலெனக்காட்சிதருமென்னகக்
கனியேதெய்வாமிர்தமே
காதலுறவுண்டுமகுடமதெனும்பதியினிற்
காருண்யபதமருளவும்
பெருகுமதிகதிபி[illegible]ர்ந்திருசரணபதமுறப்
பேரின்பவெள்ளமோடிப்
பேசாதவநுபோகவாசாமகோசரப்
பிறியர்தநிலையில்வீ[illegible]ந்தா
மருவிபொருதிணையளவுகிணைவுசற்றங்கனே
மாறுதருந்தவருள்வீர்
மதியினொளிதிகழசங்குக்குசருந்தவ
மணியப்துல்காதிறொலியே. (க)

கண்டதெல்லாமழியுமென்றுமறைவிண்டிடு
[illegible]ருத்தினைத்தேர்ந்திடாதெக்
கா[illegible]ரும்பு[illegible]மென்றெண்ணுமனமாயையாற்
[illegible]லையெரிதாயலைவனே
பண்டமைப்[illegible]யாமென்[illegible]மாப்பெரும்
பாவியென்வினை[illegible]

பரவெளிநிராலம்பமான ஜகசோதிநிலை
பதிவாயெனக்களித்துத்
தொண்டுசெய்திடவும்மையண்டினேனாயகா
சுத்தசைதன்யமான
சோபனமெலாமுறுந்துய்யநபிபோ[illegible]ரன்
றொல்வினையகற்றிமவுன
மன்றுணின்றாடுதிருமணிமேடையதிலின்ப
வாக்கருளுமாகருணையின்
மதியினொளிதிகழசங்குத்தாசருந்தவ
மணியப்துல்காதிறொலியே. (௨)

தத்துவமறிந்தநன்முத்தர்போனான்முறைகள்
சாற்றுவேனறிவற்றயான்
சற்குணர்கள்போலவுஞ்சஞ்சரிப்பேனீதி
சார்ந்தகுணரகிதமறியே
னித்தகையவெண்ணத்தினாலெனதுமனமலைவ
தீடேறவருளாகுமோ
யில்லையினியுள்ளபடிசாதனையிலநுதினமு
மீடேறவிறைவனன்புப்
பற்றுதலுடன்றிட்டிபெற்றுறவதாகநற்
பரவெளியிலநுபோகமாய்ப்
பாவனைகளறநின்றுகோவருள்பொருந்திடப்
பண்ணுவதுமக்கரியதோ
வற்றாதருட்பொருளினூற்றதிருவானந்த
வாக்கருளுமாகருணையின்
மதியினொளிதிகழசங்குத்தாசருந்தவ
மணியப்துல்காதிறொலியே. (௩)

ஆறாறுதத்துவ[illegible]தாசிவிளையாடு
ப[illegible]யபதமுறவாகயா
னநுதினமுமனதினிடையாரா[illegible]பாகுலவ
[illegible]ன்புறவுளம்பொருந்தி[illegible]

பூருயமானவலிபாகியிருளாமிற்
பொருந்தியிருபீமினிடையிற்
பூட்டைத்திறந்துவப்பூரணபதிக்குட்
புகுந்துமதியவசமுறவும்
சேருதவல்வினையெலாமகலமெஞ்ஞான
தீரமொன்றருள்புரிகுவீர்
சிந்தாமணிக்குலவுமணிமேடைதனிலரசு
செய்யுநற்புண்யகுருவே
மாறுதுநந்தியொளிகா[illegible]டுமருள[illegible]னந்த
வாக்க[illegible]ளுமாகருணையின்
ம[illegible]ளிதிகழசங்குத்தூசருந்தவ
மணியப்துல்காதிறுலியே. (௪)

முத்திக்குவித்தானவத்துவிதவத்துவே
மோனமணிஞானமணியே
மூவுலகிலுள்ளபெரியோர்களுமகிழ்ந்திடு
முப்பாழினப்பதியிலே
பத்தியொளிபளபளென்றத்தொய்தமாகிடப்
பாலநேர்வழியேகிடப்
பண்புற்றஞானமாங்கண்பெற்றுமேலான
பரலோகவாழ்வுசேரக்
கத்தனருளானதையகத்தினிலுணர்ந்திடக்
[illegible]னிலுமொருமித்திடக்
கலிமாவினிலையிலுறவொருநாளுமகலாத
காட்சியுறவாகியொளிர
வற்றாதவாரிதியிலுற்றதிருமந்திர
வாக்கருளுமாகருணையின்
மதியி[illegible]னொளிதிகழசங்குத்தூசருந்தவ
[illegible]ணியப்துல்காதிறுலியே. (௫)

[illegible]காரமூடுறுவியந்தாத்
[illegible]மயருளுப[illegible]ரமா
[illegible]சையுருவானதி
[illegible]

தந்திடுமேருபரியந்தரமுலாவியுந்
தானாகநின்றகுருவே
சாசுவதசம்பன்னசகசநிட்களமோன
சாயுட்சியபதமடையவே
எந்தவேளையுமும்மையண்டினேனேழையா
னீடேறவருள்கூர்ந்திடு
மேகப்ரகாசரேயெங்குநிறைநேசரே
யெந்தையேயிதுசமயமே
வந்துமதுபாதாரவிந்தமென்சென்னியுற
வாக்கருளுமாகருணையின்
மதியினொளிதிகழசங்குத்தாசருந்தவ
மணியப்துல்காதிறொலியே. (௬)

சுத்தமயபடிகமாயெத்திசைவிளக்கமாய்த்
தோன்றுதுதோன்றமுதலே
துரியநடுவாகிவளரின்பமேயன்புறுஞ்
சோதிப்ரகாசவடிவே
நித்தமுமனத்தினிற்பத்திபுறவேயரு
ளொருப்பிணையெழுப்பிமேலே
நிலைகண்டமர்ந்தசுழிநேர்நின்றிலங்கிட
நிகரிலாச்சோதிமயமே
சித்தமேசித்தமுடியானதிருமோனமே
செல்வமேசெய்மேருவென்
றேகமுகல்நாளெனனுந்தீவினையெலாமறச்
செய்தருளுமிதுசமயமே
மற்றுதுணையில்லையெமதுற்றதுணையேநல்ல
வாக்கருளுமாகருணையின்
மதியினொளிதிகழசங்குத்தாசருந்தவ
மணியப்துல்காதிறொலியே. (௭)

பூவின்மலர்[illegible]ரிவாகிநறையாகிமுடிவிலாப்
பூரணவிலாசமாகிப்

பொற்புயருநவரத்னமணியாகியுற்புதப்
பொக்கிஷப்பொருளுமாகிப்
கூவிற்கனிந்தரஸவர்க்கமாயிணையற்ற
குதரத்திலான்மணியே
கூடிக்கலந்துறவதாகப்பொருந்தவெங்
கொடுவினையகற்றமுதலே
தேவிருவேளைவந்தேத்திப்பணிந்திடச்
செயமேளகந்தொனிக்கச்
சின்முத்திரங்கபதிதனிலாசுசெய்யுநற்
சித்தியேசித்தர்புகழே
வாவாவெனப்புகழ்ந்தேதனினிப்புற்றதிரு
வாக்கருளுமாகருணையின்
மதிபிறொளிதிகழசங்குத்தாசருந்தவ
மணியப்துல்காதிறுஜீலியே. (௮)

அங்கெங்குமுள்ளனவனைத்தினுமகம்புற
மப்பாலுமப்பாலுமா
யதுவிதுவெனும்மளவுமற்றதாவிணைதுணை
யாறொடுபெணவியுமற்றுச்
சங்கையறுமெஞ்ஞானமுற்றவரகத்திலொளிர்
சாசுவதமானபொருளே
சரியென்றநிலையுறப்பரிகொண்டறிந்திடத்
தன்னருள்விளக்கமுறவும்
புங்குபங்காகவருமனமாயையகலவும்
பாலவழிநேராகிடப்
பரிதிமதிசுடரொளிவுமொன்றுவிணங்கிப்
பரங்குன்றமர்ந்தமணியே
மங்காதரத்னகிரிபீடத்திலங்கநல்
வாக்கருளுமாகருணையின்
மதிபிறொளிதிகழசங்குத்தாசருந்தவ
மணியப்துல்காதிறுஜீலியே. (௧)

அல்ஹம்துலில்லாகியாரப்பிலாலமீ
னதிபுகழுதியெங்கு

மாதமரபினிலாகிநீதிமுறைதவறாத
வறுசுபருமகுமூதரின்
சொல்லுறுதிநிலையெனச்சொக்கியருள்பெற்றிடுஞ்
சுல்த்தானுலாரிபீனே
துணையாகநாளுமென்வினையகல்வுங்களிரு
தூயமலரடிநம்பினேன்
பல்வளமிகுந்துலவுபதியிளசைதனில்மிக்க
பண்புபெறுசிக்கந்தரின்
பாலனாகூர்க்கன்னிபதமடையவும்புகழ்ப்
பரக்கூறியேதுதித்தேன்
வல்லறஹ்மானருளினுள்ளன்புபெற்றிட
வாக்கருளுமாகருணையின்
மதியமெனவொளிதிகழசங்குத்தாசருந்தவ
மணியப்துல்காதிறொலியே. (௧0)

திருப்பரங்குன்றம்வாழ் ஒலியவர்களின் றுதி.

அறனருளுறவாயும்பொனம்பர்வந்திறைஞ்சநாளும்
மறையினுட்பொருளாராய்ந்துயகத்துவம்பெற்றீர்மோனத்
துறவினிலடைந்தகோவென் றுயர்வினையகற்றுமிக்க
திறனுறுபரங்குன்றம்வாழ்சிக்கந்தரொலியெந்தேவே. (௧)
கண்டிடவுமையெந்நாளுங்கருதினர்காணுங்காட்சி
பண்டுளவினைபோமின்பப்பரவெளிமேவுநல்ல
தொண்டுறப்புரியுங்கோவென் றுயர்வினையகற்றுமிக்க
தென்திருப்பரங்குன்றம்வாழ்சிக்கந்தரொலியெந்தேவே. (௨)
அழகியகிரிமேலுச்சத்தமர்ந்திடுமணியேயன்பர்
உளங்கனிந்தொளிருஞ்சோதியுண்மையேதருமானந்த
வழியருளோங்கவென் றன்வல்வினையகற்றுமிக்க
தெளிவுறுபரங்குன்றம்வாழ்சிக்கந்தரொலியெந்தேவே. (௩)
இகபரமெங்குமோன் றாயிலங்கிடுமுறவானந்தப்
பகலிரவற்றபுண்யபதிநிலையருளுற்றோங்க

மிகுபுகழளிப்பீரென்றன்மிடிவினையகற்றுமிக்க
சிகரநற்பரங்குன்றம்வாழ்சிக்கந்தரொலியெந்தேவே. (௪)

ஹவாவெனுமனத்தின்பாசக்கட்டினிலாகாவுன்னற்
சுவாதினமலைமேலின்பச்சுயம்பொலிகேட்கநின்றீர்
நிவாவருள்புரிவீரென்றன்நெடுந்துயரகற்றுமிக்க
சிவாதிருப்பரங்குன்றம்வாழ்சிக்கந்தரொலியெந்தேவே. (௫)

உடைபலவிருதாபூண்டுவுலகர்தம்வசனமெய்க்க
விடைபலகற்றுலொன்றும்வீடுறப்போமோவின்பக்
கடைவழித்துணையாய்மேவக்கருத்துறப்புரிவீர்மிக்க
கிடமுறப்பிணியைமாற்றுஞ்சிக்கந்தரொலியெந்தேவே. (௬)

வீரியம்பலவும்பேசி[illegible]தில்லாமூடன்
கோரமூவாசாபாசங்கொடுவினையனுகாவண்ணம்
பாரமெஞ்ஞானவாக்குப்பகருவீரருளேமிக்க
தீரமாம்பிணியைமாற்றுஞ்சிக்கந்தரொலியெந்தேவே. (௭)

அலிபுலாம்ஹேமீம்தாலிலடங்கியகருவின்மூல
மலிபதுவைனிற்பூட்டியறிந்திடவருளைக்காட்டு
மலிபதுநிலையிலாகவறவினையகற்றுமிக்க
வலிமைநற்பரங்குன்றம்வாழ்மகத்துவவொலியெந்தேவே. (௮)

விதிமதிநடுவொன்றாகிவிளங்கிடுமைனின்சூட்சப்
பதிநிருவிகற்பமற்றும்பாவனைக்கெட்டாவல்ல
கதியினிலுறவேவிந்தைகாட்டிடுமௌனமிக்க
நதிபெரும்பரங்குன்றம்வாழ்சிக்கந்தரொலியெந்தேவே. (௯)

ஆரணமுடியேயா[illegible]யனுதினின்மயமாஞ்சோதிப்
பூரணவடிவேயெல்லாப்புகழினையறிவானுன்னைக்
காரணகுருவும்பாதக்கழலவிசிரமேற்கொள்ளத்
தீரமொன்றருளுமோனச்சிக்கந்தரொலியெந்தேவே. (௧௦)

[illegible]றமாய்பெண்டிர்மக்கள்திரவியம்பலவுமுத்தி
[illegible]ற்றுமோதருமேவயிந்தக்கொடுவினையகற்றித்தனி

லேற்றிடுமின்பஞானமெய்க்களித்திடுவீர்மிக்க
சாற்றினேணுப்பரங்குன்றம்வாழ்சற்குருவொலியெங்தேவே(கக)

உற்பவித்தொடுங்குமாயத்துகளுறவாகிநாளும்
பற்பலகருமஞ்செய்யும்பாவிநற்கதியின்மேவக்
கற்பனையில்லாமோனக்கடைவழியருளுமிக்க
சிற்பரங்குன்றம்வாழும்சிக்கந்தரொலியெங்தேவே. (கஉ)

பந்தமற்றந்தவாழ்வின்பரத்தடிமுடியேசூட்ச
வுந்தியுந்நலாவுநந்தியொளிவருகாட்டுங்கோடி
வந்தரெமுமக்கேயென்றன்வல்வினையகற்றுமிக்க
செந்திருப்பரங்குன்றம்வாழ்சிக்கந்தரொலியெங்தேவே. (கங)

மலரினின்வாசம்போலமெய்ப்பொருளேமுற்றுந்
துலங்கிடமனமோபந்தத்துபரறவுறவனந்தப்
பலந்தருமௌனவாழ்வைப்பற்றிடவருளேமிக்க
சிலம்பொலிவழியைக்காட்டுஞ்சிக்கந்தரொலியெங்தேவே. (கச)

சத்தியநிலையேமெய்யென்றடர்திருப்பரங்குன்றத்திற்
பத்தியிற்சிறந்துவாழும்பதிமுகம்மதுமீராவென்
புத்தியின்புறவேஞானப்பொருளுபதேசத்தாலென்
சிந்தனற்குன்றத்தேகச்செய்தவீரொலியெங்தேவே. (கரு)

கவலையோன்பாவிநாகூர்க்கனியுமைப்புகழ்ந்தேனென்றன்
பவமெலாமகற்றிஞானப்பரவெளித்துணையாய்மேவத்
தவமதுவளிப்பீரென்றன்றளர்வினையகற்றுமிக்க
சிவமருட்பரங்குன்றம்வாழ்சிக்கந்தரொலியெங்தேவே. (கசா)

வாழிபொன்னம்பலத்தின்வாழ்பவராருள்வாழி
வாழியென்புறவேகாட்டுமவுனசற்குருவேவாழி
வாழியேதழைக்கநின்றமகத்துவமாரும்வாழி
வாழிபெற்றநூற்றேங்கிவழங்கிடவாழிவாழி. (களா)

பலவகைத் துதிகள்.

பார்முதல்யாவும்படைத்தளிக்கின்றபராபரன்றாதர்நன்னபியும்
பேர்புகழ்நாலுயாரசனுமை னும்பெருகியசுதுபொலியாரும்
நேர்பெறுமசுகாபீகளஃஷரினெறியொழுங்குணர்த்துநாலிமாமுங்
கோரியேதுதித்தெளகுறையெலாமகற்றிக்குணமருள்புரிந்திடுவீரே.

வேறு.

அத்தியிலடித்தலைகளாலமிசைபீதே
புத்தியறியாவுள்ளபுழுக்கிசைபும்புன்மொழி
சுத்தமறியானிசைத்தசொற்கவிக்கிரங்கிப்
பத்தியதாயாளவும்பதமலர்பணிந்தேன். (உ)

வேறு.

தேன்மலர்ப்பொழில்சூழிளஞ்சைநன்னகர்வாழ்
தீன்வழித்துறைதெரிந்திலங்குந்
தானமுந்தவமுமோருருவெடுத்தான்
றவத்தருள்முகம்மதுமீறான்
கானமுதினியசொற்பயில்ஞானக்
கலைதெரிந்திலறம்வெறுத்து
மோனநற்பயிர்க்கோருருவெடுத்துலகில்
முடித்திடவந்தமாதவத்தோர். (ந)

தேறியமவுனயோகவானந்தச்
சிக்கந்தரொலிபுகழ்மிக்க
பாரினிலவர்க்கும்பரிவுறவிளங்கப்
பார்முழுதினுடிசைபரவக்
கோரியகருமங்குறைவறமுடிக்குங்
குணக்கடலாகுமன்பினராய்த்
தாரணிபுயத்தீரருந்தவத்துறைக்கோர்
தத்துவங்கடந்தசற்குருவே. (ச)

வேறு. வினா.

கோனருளானகொள்கையுமறியக்
கும்பகக்குகைக்குழியதனிற்
பான்மதிசேரப்பண்பதுமாகப்
பைஞ்சுடரானதுந்தோன்ற
ஈனமதானசொற்களைத்தவிர்க்க
வெனக்கொருவுபாயமேதெரியத்
தீன்வழியதனிற்செவ்விதாயறியத்
திறவுகோலானதைச்செப்பீர். (௫)

விடை.

பரவுதலாகப்பண்பதுபண்பாப்பார்முடியாகியபழமா
யரவுதன்னஞ்சாற்சிறியேபாயுமாக்கினைமேலதாயோடி.
வரவரவதுவாவனைந்துநின்றுடுமாயமாய்ப்பலபலவிதமா
மருவுதலாகிநின்றதைத்திடமாமார்க்கமதறிந்துகொள்வாயே. (௬)

வேறு. வினா.

தெளிவைத்தெரியவென்குருவேசென்னிமீதேநேர்காட்டி
விளங்கியிலங்கச்சோதியருள்விளைவிற்றெரிந்துவுணர்வாகக்
களித்துமொழியுங்கலைநாலைக்கடுகிப்பதியிலுறவாகிப்
பளிங்குநிறமாய்ப்பார்த்திருக்கப்பகர்வீரினியகலிமாவை (௭)

வேறு. விடை.

ஓமென்றபாறையின்மேற்கூபமொன்று
ஓயாமற்சென்னீருங்குமிழிபாயும்
ஊமென்றவட்சரமும்மதிமேலேதோன்ற
மாதவனுமம்புலியுமாடிநிற்க
ஆமென்றவுமையவள்தானொருகாலாகி
யுலாசமுளமணிமேடைமீதிருந்து
தாமென்றசத்தியவள்தானாய்நின்ற
தந்திரத்தையுன்றனக்குச்சாற்றினேனே. (௮)

வேறு. வினா

மெய்யினில்மெய்யாமேலொடுகீழாய்மெல்லியபூமலர்மணமாய்
நொய்யினில்நொய்யா நுட்பமாயணுவாநோக்கியவிடமெலாமதுவாய்
வையமதறியவான்கதிர்மதியாவன்னியாய்மின்னலாயிடியாய்த்
துய்யதாமெங்குந்தோன்றிடவுறைத்ததுல்லியச்சுருதியைச்சொல்வீர்

வேறு. விடை.

அருவொருவணுவாவின்பவகம்பொருளறிந்திருக்கப்
பொருவொருபுனிதமாகபபெருந்திடப்பொற்பிலாகித்
திருவொருமனத்தாற்றுக்கத்திலூகடந்ததுமேற்செல்லக்
கருவொடுதீனைவிற்சேர்க்கக்கருத்துறைதெரிந்துகொள்ளே. (கo)

வேறு. வினா.

காரணமானகன்னிககனமாய்நின்றிலங்கப்
பூரணமாகநல்லபுந்தியிற்றரித்திருக்கக்
தோரணமாகக்காணுஞ்சூட்சமுஞ்சூட்சியான
வாரணமனமுந்தேறவறிவெனக்கறைகுமையா. (கக)

வேறு. விடை.

காண்பராகினுங்கடைவழியுணர்வதுகடினம்
விண்பராவுமூவாசையின்மேடைவிட்டகற்றித்
தானுவானதைக்கதியெனத்தமியனேன்றனக்குத்
தோணுமாறுநற்றுறைதெரிந்திடச்சொல்லுஞ்சுருதி. (கஉ)

வினா.

எந்தமன்னருமிடரிலாதிருந்ததுமுண்டோ
பந்தமாகியபலவிதமானதும்பொய்யே
யந்தரந்தனிலணுவணுவானதைத்தெரியச்
சந்ததம்புகழ்சமரசம்வந்திடச்சாற்றீர். (கங)

விடை.

மாநிலந்தனில்மன்னருமற்றவராருங்
கோனிருந்தகுறிப்பைத்தான்றெரிந்ததுமுண்டோ
தேனில்வீழ்ந்திடுமீயதுபோல்மனந்தியங்கி
யானில்நின்றதையறிந்திடயான்சொன்னேனப்பா. (கச)

வினா.

பற்றிநின்றிடுமார்க்கமேபெரிதெனச்சொலலாங்
கற்றறிந்திடக்கருத்துறையுணர்ந்திடக்கருதி
யுற்றுநின்றிடவுறவுமேலோடுமுற்பணத்தை
யொற்றிநின்றிடவெனக்கருளானந்தமுரைப்பீர். (கரு)

விடை.

உரைகடந்திடும்பொருளினைபுணர்வதுபொருந்த
கரைகடந்திடக்காரணசூட்சமுந்தெரிய
வரைகடந்துயர்மாதவமாகியமவுனம்
புரையறும்படிப்புகழெனத்தந்த[illegible]தன். (கசு)

குருவறிந்திடக்குணமதுகுவிந்துமேல்நிற்க
வரியதானமதானதிலசைவுகண்டறியச்
சுருதியாகமச்சுலோகங்களானதையுணர
வருதிகந்திடும்வல்லமையாகியகுருவே. (கஎ

வேறு.

தானவனுகிநின்றதலமதுதெரிந்திடாம
லீனமானதிலேநின்றிரவோடுபகலுமாக
மோனமானதுதேருமல்முற்றினூடமாகிக்
கானலைநீரென்றெண்ணுங்கலைமான்போற்றிரியலானேன். (கஅ

வேறு.

சிரித்துவயதிற்றிரிந்தலைந்துசிலபேர்மொழியைமெய்யெனவே
பெரியசுகத்தைப்பாராமற்பேதைத்தனமாமாயையிற்குட்
பொருதிப்பொருதியுழன்றுமனப்பொய்யும்பவமுமாயிருந்து
வருந்தியுணரத்தெரியாமல்வாதுமொழிந்துதிரிந்தேனே. (ககூ

வேறு.

பொங்கியபுலன்களெல்லாம்போர்புரிந்திடுமிப்போது
[illegible]ங்குல்போல்விளக்கைமூடிக்கருத்துறைதெரியாமற்று[illegible]

மங்குல்வாசிமீறிமனத்தெளிவிலாப்பாவி
யெங்கணுமிலையாவண்ணமிறைப்பநட்புகட்டுமீரே. (உ0)

ஆளுவாராளாய்நிற்கவானந்தமயமாய்த்தோன்றப்
பாழதுபாழ்போகாமற்பராபரவெளியிற்சேர்க்கத்
தாளதுகண்டுஞ்ஞானத்தலமறிந்துணர்வாமோனக்
கோளறமேடைதன்னிற்கொண்டிடக்கிருபைசெய்வீர். (உக)

சூழ்மனஞ்சூட்சியாகச்சுட்டொளிவெளிச்சங்காண
நாளெலாம்பணிந்தேனையாற்றவுமாகவென்று
மாழ்ந்துநற்கருத்துள்ளாகவயர்ந்திடாதிருந்தெந்நாளும்
வாழ்ந்திடக்குகையிற்குள்ளே[illegible]ங்கிடக்கிருபைசெய்வீர். (உஉ)

சத்தியேபருள்செய்வாயேதயாபரமவுனத்தாயே
பத்தியேநின்றுயெங்கும்பகலவனொளிக்கப்பாலே
முத்தியேதருவாயென்றுன்முன்னிலையாகவந்து
நித்தியானந்தமாகநிலைதனைக்காட்டுவாயே. (உங)

காட்டிடப்பொருள்வேறுண்டோகபடமாய்நின்றகன்னி
மூட்டிடவைப்பாய்நீயுமுடியுமேலோரம்பார்த்துச்
சாட்டிநீகழிக்கவேண்டாஞ்சமர்செயவென்றுனுண்டோ
கூட்டியேவைத்துநீயுங்குருநிலைபறியச்செய்வாய். (உச)

குங்குமவாசத்தாளேகுமரியேவயதோகொஞ்ச
மெங்குமாய்நின்றகோவேயெளியனைக்காத்துரட்சி
சங்கையிற்குள்ளேயானுஞ்சஞ்சலத்தாபமானே
னங்கதுநீக்கியோடவருள்தரவேண்டுமம்மா. (உரு)

சச்சிதானந்தமானசகலமுமொடுங்கும்போதிற்
செச்சிதமாகநீயுங்கிளைகளுமெங்கேநிற்பாய்
தச்சுருவாகக்காட்டத்தயவுசெய்யடியேனுக்கு
நிச்சயமாகத்தானுமினைவில்வந்துதிக்கச்செய்வாய். (உசா)

வேறு.

அச்சரம்மதுவாமென்றெழுத்துணர்ந்
சச்சிதம்போலிலங்கத்தெளிந்தறிந்

தச்சமற்றவருந்துறையாகவோர்
சொச்சமானசுயப்பொருள்சூட்டுவாய். (௨௭)

பாரெங்கும்புகழானபரங்கிரி
நேரிலங்குமகத்துவம்பெற்றநின்
சிரனந்தம்படைத்திடுதிண்புயா
காரணம்பெறவேகதிகாட்டுமே. (௨௮)

வாவிசோலைவயங்குமலைத[illegible]தாடர்
மேவிடும்பெயர்முகம்மதுமீறுநன்
ஆவிகாயமடக்கமறிந்தரும்
பாவியாநின்பதமலர்போற்றினேன். (௨௯)

சாலமுற்றநற்சாதுக்களாகியே
நாலையேற்றிநலம்பெறுநாதரே
மூலமுற்றநன்மூச்சுடரானதைப்
பாலீமற்றப்பதமருள்பூட்டுவீர். (௩௰)

சாதுசற்குருசற்சமயத்துறை
வேதுபெற்றுநல்மெய்ப்புணர்ப்புதா
கோதிலாக்குணக்குன்றப்பெருங்கொணி
காதிலேறக்கருத்துளிருத்துவாய். (௩௧)

கன்னல்வாழைகமுகுபலாவனம்
பின்னலாகவிருந்துபின்ஞேங்கிடு
மன்னர்வாழுநன்மாமலைதன்னிலே
துன்னிடுங்குருதய்யவனின்னருள். (௩௨

மல்லிமுல்லைமலர்கள்சொரிந்திடு
மெல்லையாமிளசைப்பதிமேவியுந்
தொல்லையாவுந்தொலைத்துறைமேவிடும்
வல்லநாயன்வழிபுக்குமான்றவா. (௩௩)

சுற்றுஞானச்சுருதிவழிமுறை
கற்றறிந்திடுங்காரணரேயருள்
சுற்றமானசுயப்பிரகாசத்தைப்
பற்றிநிற்கவெனக்கருள்பண்ணுமே. (௩௪)

ஆசபாசமகற்றியுநற்பதி
நேசமாம்பதிமேவிடநிச்சயக்
கோசவாசரக்கோத்திரமானதைத்
தாசரேதருவீர்குருதாசரே. (௬௫)

வேறு.

தீட்சைகளைப்பெற்றுத்தினந்தினமுந்தியெழுத்தை
மாட்சலென்றயானிதழுமானிலத்திலேதிரிந்து
காட்சிகளைக்காணக்கனகசபாமேடையின்மேல்
வாச்சுதேயென்றனக்குவல்லகுருநல்லவருள். (௬௬)

வேறு.

அணியுமல்லத்தொனியுமல்லவகாரமாகியவுகாரமல்ல
நணியுமல்லநுட்பமல்லநுட்பமாகின்றதோரணுவுமல்ல
கணுவுமல்லத்தாணுவல்லத்தாணுகின்றதோரிருளுமல்ல
மனமுமல்லக்கெதியுமல்லமாசற்றசித்தி தடிகொண்டதாமே. (௬௭)

வேறு.

குகரத்திருந்தகோவிக்குருமணியானவிற்றுஞ்
சிகரத்துமுந்தகாவிற்சிமாதனமீதிருந்து
வெதிரொத்தநபிமுன்பாகவிறைமொழிபகரும்போது
குதுபுற்றநிலைமைதன்னைக்குறித்துரைசெய்விரய்யா. (௬௮)

என்குருதாசரேநீரெனக்கதையருள்வேண்டுந்
தன்னவன்தானுத்தானுப்தானவனுறைறைப்
[illegible]ன்னவன்முன்னதாகமுன்னமேமுன்னதாக
பி[illegible]னனேபின்னேநேராய்ப்பிரிந்ததைப்பிரித்துச்சொல்வீர். ()

பி[illegible]தைப்பிரிக்கவென்றுற்பிசகிடாமனமும்வேண்டும்
ம[illegible]ன[illegible]னபியுரைத்தவருமறைபுணரவேண்டுஞ்
சொன்னதைச்சொல்லொண்ணுதசூட்சதற்சூட்சாசூட்சம்
[illegible]னலாயிருக்குந்தானுப்பிரித்திடலாகாதப்பா. (௭௦)

ஆகச்செய்யுள். ௬௬.

ஞானப்புகழ்ச்சிந்து.

வெண்பா.

எங்குமருளாயிலங்குந்திருவடியோன்
றங்கொளிருமோனத்தரும்புகழே-பங்கமறச்
செந்தமிழாற்சிந்தருளிச்செய்திடவுனல்லருளைத்
தந்தருளுமேலவனேதான்.

அருவுருவமாகியெங்கு மாடிடும்பரம்பொருளை
யாதியே யனாதியேக நித்தனே-தின
மோதியே துதிசெய்குவேன் சுத்தனே (க)

சோதியொளிவிற்பிரிவதாகிவளரற்புத மே
சுந்தரமிருந்தமகுஆதரே கதி
யுந்தரநமருளு நீதரே (உ)

கோதறுங்குலத்திலானதூதர்வழியர்களையுங்
கூடவேஹசனுசைனைப் போற்றினேன் இன்னம்
காடியே குதுபொலியைவாழ்த்தினேன் (ங)

தேன்மலர்சொரியும்பொழில்வானுபர்கிரிகளின்னுஞ்
சீர்வளம் பொருந்தும் பகுதாதினிற் செல்வ
தோர் குலமுகியித்தீனென் யாதினி (ச)

மோனமணியான்வொலி ஞானபதிமேவிவாழு
முண்டகத்திலங்கு மப்துல்க்காதிரே வுண்மை
கண்டிடக்கதியருளும் வேதரே (ரு)

நன்னிலம் பொருந்தும் நாகை தன்னில் வாழ்ஹமீதொலியே
நாதர் மகு ஆதரினற் பேரரே புங்கள்
பாத மருள் மோனவதிகாரரே (சா)

வாளி பல சோலை மிகுங் கூவிடுங்குயில் களிசை
வண்டின மது வருந்திப் பாடுமே புயல்
கண்டு மயில் நின்று குதித் தாடுமே (எ)

தென்பரங்குன்றத்திலருளன்பு பெற்றிருந்த திருச்
செல்வராஞ் சிக்கந்தர் பாட்சா சேவடி போற்றி
மல்கியே புகழ்படைத்த பாவடி (௮)

எவ்வரங்களுந்துலங்குந்திவ்வியவிளைசைங்க
ரின்புறுமுக்மான்றவத்துச் சேயராம் அமிழ்
தின் சொல் முகமது மீரான் போகராம (௯)

கன்னல்ருசி போலிசைக்கு மன்னர்வாழ் கிரியினுறை
காதல் முகம்மது மீரான் தஞ்சமே பதந்
தேடியே செந்தமிழ்ச் சொன்னேன் தஞ்சமே (௧0)

தானவனருள் பெருக மோன வழிதானறிந்து
சாதனம் புரிந்தகுரு நேசரே யெந்தம்
பாதகங்களோடவருள் நேசரே (௧௧)

ஆரணமுடியிலாகிப் பூரணப் பொருளதான
வண்ணமெலங்குருவருளைப் போற்றமே யருள்
முன்னொன விலங்கிக் கவி சாற்றமே (௧௨)

ஞாலமீதிலேயுதித்துக்கோலபாசன்கையடுத்து
நன்கது விளங்கிடாமல் வாடினேன் ஒலி
யுங்கதியு நம்பிமிகத் தேடினேன் (௧௩)

நீதறும்வழியிலாகக்கோதறும் பதங்களான
சீரடிகொழுதேனருள் சேரவே யானு
மேரடிபணுகப்பவந் தீரவே (௧௪)

கருவுதலாகிவரும் பூதவடிவான தெல்லாம்
கருடியமறிந்து கொள்ள வேண்டுமே யதிற்
கூடிடக்கருவழியுந் தோன்றுமே (௧௫)

காலகால மாறி மாறிக் கோல கோல மாகு மணங்
காயல் நகர் போக வழி யாகவே கதி
நேயமாகப் பாவமெல்லா மேகவே (௧௬)

ஆறுதலமேவி நின்றவற்புதநிறைந்தன
ஆரொளியிற்சென்றுநித்தம் சேரும்ஸ் என
தோரறிவுக்குள்ளுறைந்து சாரமே (கஎ)

காயகற்பந்தேடிமலேதேயமேவியோடினதாற்
கானல்கண்டமானதுபோ லாகுவாய் ஞானந்
தோணவே நடுவில் மன மேகுவாய் (கஅ)

கொம்பினிலிருந்ததேனை நம்பிமுடவனதைக்
கொண்டிட நினைந்தாலதுங் கூடுமோ சன
சண்டியெற் கறிவு சொன்னல் நாடுமோ (கசூ)

சூதுவாதுசெய்கின்றலேதுசாதனமயிலே
சூறை வழியானவரும் பாகுவாய் பல
பேர்களும் நகைக்க கர கேதுவாய் (உ0)

எத்தனையோபுத்திகளெடுத்தயாளுரைத்திடினு
மிங்குமங்குமாயலந்தாய் நெஞ்சமே திருச்
சங்கமமறிந்துணர்வாய் தஞ்சமே (உக)

வஞ்சகமறவேநிதம்அஞ்சுநேரமுந்தொழவே
பஞ்செனப் பறந்துவிடும் பாவமே வகை
யஞ்சதுமொன்றாகிப்பதி தாவுமே (உஉ)

மக்கநகர்மேவிவாழுஞ்சொக்கநகராதிபதி
வள்ளல்மொழியுண்மையதைப் பாருமே பொல்லாக்
கள்ளமெல்லாம்நீங்கிவழி சேருமே (உ௩)

உந்தியிலுதித்துவுண்ணவிந்தையாகவேநின்றாடு
முண்மையதுவாகுமதைத் தேடுமே மிகு
தென்மையானசோதியுள்நின் றாடுமே (உச)

பாலபாலமீதிலேறிக்காலகாலமும்பணிந்தால்
மாலே காலே யென்பதுவு மில்லையே மர்ம
மூல மணியாடு மந்த ? வெல்லையே (உரு)

ஆராதாரமாகித்துரேரிமேனர[illegible]ங்குந்
சூட்சவழிதானறிந்தும் [illegible]மேவ பதி
மோட்சமேகடாட்சமது வாகமேவ (௨௬)

அந்தரமூலாவிவருஞ் சுந்தர[illegible]பொருளுணர
வாறுதலாய்நின்றபதி கூடமேவ நல்ல
மேருவிற் சென்றுனந்தங்கொண் டாடமேவ (௨௭)

பாச்சலூர்ப்பதியிலாகிச் சூட்சமாகவேநின்றிடும்
பான்மையது முண்மையுற வாகமேவ திருத்
தன்மையாகத் தின்மையற மேவகமேவ (௨௮)

மாடமீதிலாயிலங்கியாடிடும்பரம்பொருளை
யோடுமைம்பொறிகள்கூடல் சேரமேவ யிரு
ளோடிடத்தெளிவதுவுட் சாரமேவ (௨௯)

நாலுசூழிபானபதிமேலையுமறிந்துகூட
நாதனருள்பெற்றுமகிழ் வாகுமே என்றும்
பேதகமிலாதநிலை யாகுமே (௩0)

காலங்குடியாயிருந்தமேலைக்கடற்சாரிபதிற்
கன்னல்ருசியாகமயிலாடுமே மன
முன்னிடக்கருணைபதுஞ் சூடுமே (௩௧)

சாலைவழிமீதிலுயர்சோலைதுழலாகிவாழுஞ்
சைசயலுள்ள மாதரசே யன்னையே மோட்சம்
மெய்யெனவேநம்பினேனு னன்னையே (௩௨)

[illegible]சமாசமானதெல்லாமோசநாசமா[illegible]வரு
மாத[illegible]வனிலேமதியுஞ் சேரமேவ கெட்ட
பாதகங்களோடிமனநே கேரமேவ (௩௩)

அந்திபகலற்றநிலைசிந்தையிலறிந்துணர
வாசபாசநாசமறு மோனமே பதி
நேசமாகவாழும்யோகத் தியானமே (௩௪)

ஆழியபதங்களானதாளிணையறிந்துசேர[illegible]
வம்பரமீதாடிநின்ற சூ[illegible] திவ்ய
கம்பமுனை மீதிலுற மோட்சமே (௩௫)

ஞானஞானமென்றுமிகவீணுரைபகர்ந்ததினல்
நற்பதங்கள்சேரும்வழி யாகுமோ நம
தற்பரமறியத்தவ மாகுமோ (௩௬)

நேமமுமறிந்துநிட்டைதாமெதுவுஞ்செய்திடாமல்
நிண்ணயங்களானதுவுந் தோணுமோ நம
தெண்ணமுமொருப்படவுங் காணுமோ (௩௭)

தத்துவக்குப்பைகளெல்லாம்வித்தெனவுதித்துவருஞ்
சத்தியந்தெரிந்துணரப் பொய்யதே கனல்
பத்தியுடன் முத்தியுறல் மெய்யதே (௩௮)

வாக்குமனமற்றபொருள்நோக்கதுவுநோக்குமொரு
வல்லமையறிந்துவதிற் கூடவும் நம்
தொல்வினைகள்நீங்கிவிரைந் தோடவும் (௩௯)

அந்திசந்தியானதெல்லாமுந்தினின்றசெந்தீயதி
லுந்தியையிணக்கி மேல்நின் றுடவே பக
லிந்தைதன்னைசந்ததங்கொண் டாடவே (௪0)

தன்னையுந்தலைவனையுமுன்னமேயறிந்துணர்ந்தாற்
றனவனருளகம்நின் றுடுமே பதி
ஞானமுடிமீதிலாகக் கூடுமே (௪௧)

வேதமுமறியவொண்ணாதீதநற்பொருளுணர
மித்தையானமாய்கையெல்லாம்நீங்கவே நல்ல
சித்தகாயமானவரு ளோங்கவே (௪௨)

மன்னுயிர்கள்பற்பலவுந்தன்னுயிர்போலநினைந்தால்
மாதவம்புரிந்தபல னாகுமே என்று
மூதறிவுடையோர்சொன்ன தாகுமே (௪௩)

சுத்தசுயமேயுணர்ந்து பத்தியுடனே பணிந்தோர்
சித்தரகத்துள்ளிலங்கும் போதமே யருள்
வித்தெனவிளங்குகின்ற நாதமே

காலங்கலவாதுநின் றுபாலமீதிலேயடர்ந்து
கம்பமுனீன்மீதிலாடி யெங்குமே சக
மும்பலவுமாகிநின்றும் பொங்குமே (

சாசுவதமாகநின் றுவாசிமீதிலேகலந்து
சர்வமயமாகியெங்கு மாடுதே அதன்
பர்வமதைக்காணமனம் நாடுதே (சு

கக்கனருளான திருமிக்கபுகழாகிவருந்
திக்கெல்லாங்கமழ்ந்துவீசும் நாயகா வேழை
பிக்கெலாமகற்றியாளுந் தாயகா (சு

மாநிலம்புகழிளசை மாநகர்வாழ்நாகூர்க்கனி
மாசறச்செந்தமிழ்ச்சிந்து பாடினேன் இறை
நேசாப்துல்காதிர் பதந் தேடினேன் (சு

தானவனபியும்வாழி மோனவப்துல்காதிர்வாழி
சாதுசற்சனர்களியாரும் வாழியே ஞான
போதனம்புகழ்ந்தசிந்தும் வாழியே. (சு

ஞானப்புகழ்ச்சிந்து முற்றிற்று.



பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
7	13	வைத்னைன்	வைத்தனன்
ஷெ	14	தருள்யுரி	தருள்புரி
8	27	நின்றவென்	நின்றவின்
21	3	மாகிப்	மாகி
22	3	வறுசுபரு	வரசுயரு
32	18	யாதினி	யாதினில்
33	26	மணங்	மனங்
34	2	நிறைந்தன	நிறைந்தனவ



[illegible] அச்சியந்திரசாலை [illegible]

[illegible]

அச்சுவேலைகள்.

தமிழ், இங்கிலிஷ் [illegible] பாஷைகளிலும், இட்டு [illegible] பத்திரி [illegible] நோட்டீசுகள் [illegible] முதலிய [illegible] வேலைகளும், [illegible] கட்டமிட்டனை [illegible], வெட்டிங் [illegible] புதிய [illegible] டைப்புகள், இ [illegible] பிழைகளில்லாமல் [illegible] பார்ட்டர்களாலு [illegible] ஒவ்வொரு [illegible] தரங்களைத் [illegible] சீக்கிரமாகவும் [illegible] செய்து கொடுக்கலாகும்.

ரப்பர் முத்திரைகள்.

ரப்பர் முத்திரைகள் அவரவர் விருப்பத்தின்படி [illegible] சீக்கிரம் செய்து [illegible] கொடுக்கலாகும்.

பயிண்டு வேலைகள்.

கட்டிங் மிஷின், ரூலிங் மிஷின், ஈம்பாசிங் மிஷின், தம்பித் தையல் மிஷின், பெர்பரேட்டிங் மிஷின், டைமிஷின் முதலிய இயந்திரங்கள் எங்களிடமிருப்பதால் இலீட்டு முதலிய அலங்காரத்துடன் வெவ்வேறுவகைய [illegible] பயிண்டுகளும் குறைந்த சார்ஜுக்கு சீக்கிரம் தயார்செய்து கொடுக்கலாகும்.

வித்தியாபாநு.

ஒருமாதாந்த தமிழ்ப்பத்திரிகை

ஆலாசாப்சகன். [illegible] சரித்திரச் சுருக்கங்கள், பல [illegible] குறிப்புக்கள், [illegible] விஷயங்கள், [illegible] குறிப்புக்கள், விசேஷச்செய்திகளின் தொகுதி [illegible] ஒவ்வொன்றும் [illegible] வெளிவருகின்றது.

தபால்கூலியுடன் வருஷசந்தா

[illegible] 2 தான்.

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்,

புரப்ரைட்டர்.